



# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## ‘அவரை விட்டு நீங்காத’ ஜனமே, அவரது சொந்த ஜனம்!

வனாந்திரத்தில் ‘மூன்று நாள் மாத்திரம்’ இயேசுவோடு தங்கியிருந்தவர்களின் பசி அறிந்து, அவர்களை அப்பத்தால் திருப்தியாக்கினார்! (மத்.15:22). “நான் உன் வீட்டில் தங்க வேண்டும்” என்ற இயேசுவின் விருப்பம் அறிந்து, அவர் தங்கும்படி ‘மனந்திரும்பி ஒப்புரவாகி’ தன் இல்லம் திறந்தான் சகேயு ! (லூக்கா.19:5). “உம்மைப் பின்பற்ற” எல்லாவற்றையும் விட்டோம்! என்றார் பேதுரு (மாற்கு.10:28). “தங்களைவிட்டு போய்விடுவாரோ!” என அஞ்சி “எங்களோடு தங்கியிரும்” என வருந்திக் கேட்டனர், எம்மாவு சீஷர்கள்! (லூக்.24:29).

‘எதையும் இழப்போம்’ ஆனால், அவர் சமூகம் ஒன்றே பாக்கியம்! என அவரை விட்டு நீங்காத ஜனமே, அவரது சொந்த ஜனம்!

-*tr*

ஏப்ரல் 2019

பெட்டகம் 21

பரல்கள் 4



# 'வர்த்திக்கப்படும் விசுவாசத்தின்' இரகசியம்!

இரட்சிக்கப்பட்டோம்! ஆகிலும் "இயேசுவைப்போல் ஜெயித்து வாழ" எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண வேண்டும், என சீஷர்கள் இயேசுவை வேண்டி நின்றார்கள் (லூக்.17:5). அவர் பரிசுத்தராய் இருக்கிறதுபோல! பிதா இரக்கமாயிருக்கிறதுபோல! இயேசு அன்பாய் இருக்கிறதுபோல! அவர் நடந்ததுபோல! பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறதுபோல! பிதா பூரண சற்குணராய் இருப்பது போல.... என அவர் ஜெயங்கொண்டதுபோல, அதே வாழ்வு சுதந்தரிக்க, நிச்சயமாய் நம் விசுவாசம் வர்த்திக்கப் பண்ணப்பட வேண்டும்!

இதற்கு இயேசு தந்த நற்செய்தி என்னவென்றால் "கடுகளவு விசுவாசம்" நமக்கிருந்தால் போதும் என தம் சீஷர்களுக்கு அழைப்பு கொடுத்து... அதை 'கடின சோதனைகளில்' அப்பியாசப்படுத்த துவங்குங்கள்! அப்போது **'மலை' நம் முன் நின்று மறிப்பதுபோல் "அவிசுவாசம்"** முன் நிற்கும்! இந்த வாழ்க்கை முடியவே முடியாது! என "காட்டத்தி மரம்" தலை விரித்து ஆடும்! இதைக்கண்டு, எண்ணற்றோர் "இந்த ஜெய வாழ்வு சாத்தியமில்லை!" என திரும்பிச் சென்று வீழ்ச்சியுற்றனர். ஆனால் சீஷர்கள் என்ன செய்ய வேண்டுமென்றே இயேசு கற்றுக் கொடுத்தார்! அவிசுவாச மலையைப் பார்த்து "பெயர்ந்துண்டுபோய், என் கண்ணில் இனியும் தென்படாதபடி, கடலின் நடுவில் வீழ்ந்து மூழ்குவாயாக" என பேச, அவ்வாறே நடக்கும்! என, விசுவாசம் வர்த்திக்கப்பட்டு ஜெயங்கொண்டு வாழ, அந்தந்த சோதனை நேரங்களில் **அவிசுவாசத்தை கழிந்து கொள்வதே விடை** என கூறி இயேசு மகிழ்ந்தார்!

*-Ed*

'பரலோக பொக்கிஷங்கள்' வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

வங்கிகணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** IndianBank-Koodal Nagar Branch,
A/c no: **502087685** IFSC Code: **IDIB000K150** (வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாச தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு :
பரலோக பொக்கிஷங்கள், 207A- Zaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.),
MADURAI - 625 018, S.India. Cell: 9843049935 Ph (O) 0452 - 2662306,
**Email: rathnakumar.t@gmail.com** *தமிழ்வலைதளம்*: **paralogapokkishangal.com, tamil.cfcindia.com**
**You Tube : paralogapokkishangal**

## 'கிறிஸ்துவின் பாடுகள்' நம்மில் நிறைவேற வேண்டும்!

*கொல்கொதாவின் கொடுமுடியில், கிறிஸ்துவின் பாடுகள் முடிவடைந்து விட்டதா? என்ற கேள்விக்கு, பவுல் விடை கூறும் போது, "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை, அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" எனக்கூறினார் (கொலோசெயர் 1:24). எது கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானது? ஆண்டவர் இயேசு* **'எல்லாம் முடிந்தது' என சிலுவையில் சொல்லவில்லையா?** *அப்படியானால் இங்கே ஒரு மிகப்பெரிய சத்தியம் அடங்கியுள்ளது!*

*சுவிசேஷங்களில் கிறிஸ்துவுக்கு ஏற்பட்ட சரீர உபத்திரவங்களை நாம் வாசிக்கிறோம். ஆனால், அவர் தன்னுடைய ஆத்துமத்திலும் பாடுகள் அடைந்தார்! அது சுவிசேஷங்களில் எழுதப்படவில்லை.*

> அவர் சிலுவையில் 'எல்லாம் முடிந்தது' என கூறியபோது, அவர் மனுஷனுடைய பாவ கிரயத்தை செலுத்தி முடித்தார் என்பது மாத்திரமல்லாமல், ஒரு மானிடன் சந்திக்கும் அனைத்து சோதனைகளையும் ஜெயித்து முடித்தார் என்பதும் பொருளாகும்.

*எனவேதான் எபிரெயர்.4:15, அவர் நம்மைப் போலவே எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவம் செய்யாதவராய் ஜெயித்தார்! என வாசிக்கிறோம். ஒவ்வொரு சோதனையிலும், 1)அந்த சோதனைக்கு விட்டு கொடுத்து, இன்பம் காண்பதற்கும் 2)அந்த சோதனையை எதிர்த்து நின்று, துன்பத்தின் வழி செல்வதற்கும், நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது. இயேசுவோ, தொடர்ச்சியாய்* **"மாம்சத்தில் பாடுபடும்" வழியை** *தெரிந்து கொண்டார் (1பேதுரு.4:1). இவ்வாறாகவே அவர், நம் யாவருக்கும் முன்னோடியாய் மாறினார். இப்போது, அவருடைய அடிச்சுவடுகளை நாமும் பின்பற்றி "மாதிரி அல்லது முன்னோடிகளாய்" மற்றவர்களுக்கு மாற வேண்டும். நாம் பாவத்தில் சோதிக்கப்படும்போது, இயேசு சென்ற 'நம் மாம்சத்தில் பாடுபடும் அதே வழியை' தெரிந்து கொள்வதற்கே பரிசுத்தாவியானவர் நம்மை நடத்துகிறார்! கொலோ. 1:24-ம்*

*வசனத்தில் பவுல் கூறும்போது, இயேசு நிறைவு பெற்றதைப்போல், சோதனை நேரங்களில், தன் ஜீவியத்தில் கடந்து சென்ற துன்பங்கள் தனக்குள் நிறைவு பெறவில்லை என்றே அங்கலாய்த்தார்!*

*இயேசு சத்தியத்திற்காக உறுதிபட நின்றபடியால், 'பல்வேறு வழியில்' வெளிப்பிரகாரமாயும் பாடுபட்டார். கிறிஸ்துவின் பாடுகளை ஒரு கண்ணாடி குவளைக்கு ஒப்பிட்டால் அவர் தன் ஜீவியத்தில் கடந்துச் செல்லவேண்டிய எல்லா துன்பங்களையும் கடந்து சென்று ஏற்றுக்கொண்டபடியால், அந்த கண்ணாடி குவளை நிறைந்து விட்டது! முடிவில், 'எல்லாம் முடிந்தது' என சிலுவையில் கூறினார். அவரைப்போலவே நமக்கும் ஒரு சரீரம் இருக்கிறபடியால், நாம் இப்போது இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி செல்கிறோம். இயேசுவில் நடந்த அதே கிரியை நமக்குள் நடக்கிறபடியால், அவரைப்போலவே 'அந்த கண்ணாடி குவளை நிரப்பப்படுகிறது'. நாம் மறுபடியும் பிறந்தபோது, நம்முடைய கண்ணாடி குவளை காலியாகவே இருந்தது. ஏனெனில், நாம் கிறிஸ்துவுக்காக யாதொன்றும் பாடுபடவில்லை! காலங்கள் செல்லச்செல்ல, நாம் கிறிஸ்துவினிமித்தம் பாடுபடுகிறபடியால், இந்த கண்ணாடி குவளை நிரம்ப ஆரம்பிக்கிறது.*

**இந்த பூமியில் பாடுகளடைந்த அதே கிறிஸ்து நமக்குள் வாசம் செய்கிறபடியால், அவர் சென்ற அதே பாடுகளுக்குள் இப்போது நம்மையும் நடத்திச்செல்ல விரும்புகிறார்!**

*வேலைக்காரன் தன் எஜமானை காட்டிலும் பெரியவனல்ல! ஆகவேதான், அவருடைய பாடுகள் அனைத்தும், நம்முடைய சரீரத்திலும் இப்போது நிறைவு பெற வேண்டும்! அது ஒரு, மெய்யாகவே மிகப்பெரிய சிலாக்கியமாகும். இங்கேயோ பவுல், தன்னுடைய கண்ணாடி குவளை இன்னமும் நிரப்பப்படவில்லை என்றல்லவா கூறுகிறார்!*

**இன்று அநேக கிறிஸ்தவர்கள், யாதொரு பாடுகளுக்குள் கடந்து செல்லும் வேளையில், அவர்கள் கிறிஸ்துவின் பாடுகளுக்குள் "கிறிஸ்துவின் ஐக்கியத்தை" பெற்றிடும் சிலாக்கியத்தை அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்!**

*நாம் மதியீனமாய் அல்லது பாவ சம்மந்தமாய் அடைந்திடும் பாடுகளை இங்கு வேதம் குறிப்பிடவில்லை. பாவமான அல்லது மதியீனமான யாதொன்றையும் இயேசு ஒருபோதும் செய்ததில்லை! இந்த உலகத்திற்கு நேர்மாறாக அவருடைய ஜீவியம் இருந்தபடியால் துன்பமடைந்தார்! அவரது முழு ஊழியமும், அவர் காலத்திலிருந்த வேதாகம வல்லுனர்களுக்கும், வேதசாஸ்திர வித்தகர்களுக்கும்*

*தொடர்ச்சியான முரண்பாடாகவே இருந்தது! ஆகவேதான், அவரைப் பகைத்து முடிவில் அவரைக் கொன்றார்கள்!*

*இதுவே, இன்றைக்கும் அதே விதமாய் சம்பவிக்கிறது. நாம் கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களாயிருந்தால் இந்த உலகத்தின் முழு மார்க்க அனுசாரங்களும் நமக்கு எதிராய் நிற்பதை நாம் கண்டு கொள்வோம். இன்றுள்ள ஏராளமான கிறிஸ்தவ வேத சாஸ்திரங்களும் மார்க்கங்களும் நமக்கு எதிராகவே நிற்கும்! இயேசுவுக்கு நேர்ந்ததைப் போலவே "தேவனை அறியாத ஜனங்களாலும், வெறும் மார்க்க பக்தி யாளர்களாலும்" நாமும் துன்பங்கள் அடைவோம். இயேசுவை 'பெயல்செபூல்' என யார் அழைத்தார்கள்? அவர்கள் கிரேக்கர்களோ அல்லது ரோமர்களோ அல்ல. அந்நாளில், பழைய ஏற்பாட்டின் வேதாகமத்தை வைத்திருந்த ஜனங்களே இப்படி அவரை அழைத்தார்கள்! இயேசுவை ஏராளமாய் துன்பப்படுத்தி கொன்ற வர்கள் யார்? பைபிளை தங்கள் கைகளில் ஏந்திகொண்டு வாழ்ந்த மார்க்கவாதிகளே அவரைக் கொன்றார்கள். நாம் கிறிஸ்துவின் பாடுகளை நிரப்புபவர்களாயிருந்தால், வேதாகமத்தை கையில் ஏந்திய மார்க்க ஜனங்கள், நம்மையும் துன்புறுத்துவார்கள்..... ஏனென்றால், அவர்கள் தேவனை அறியவில்லை! அவர்கள் இயேசுவின் பிதாவை அறியாதபடியால், அவரை வெறுத்து துன்புறுத்தினார்கள் என இயேசு கூறினார். இப்போதும், அதே செயலை நமக்கும் செய்வார்கள்.*

*பவுல் இங்கே கூறும்போது "இந்த பாடுகளில் நான் சந்தோஷப் படுகிறேன்! ஏனெனில், என்னுடைய பங்கை நான் நிறைவேற்றி முடித்துள்ளேன்!" என்றார். இவ்வாறு, கிறிஸ்துவின் சரீரமான சபையில் நம் அனைவருக்கும் ஒரு பங்கு உண்டு.*

> **முதலாவதாக இயேசு தன் சரீரத்தில் பாடுபட்டார். இப்போதோ, அவருடைய சபையாகிய 'ஆவிக்குரிய சரீரத்தில்' அவர் பாடுபட வேண்டியுள்ளது. இந்த பாடுகளுக்குரிய பங்கே உங்களுக்கென்றும் எனக்கென்றும் உள்ளது!**

*உங்கள் பங்கை நான் நிறைவேற்ற முடியாததுபோலவே, என்னுடைய பங்கை நீங்கள் நிறைவேற்ற இயலாது. நீங்கள் சில பாடுகளில் சென்று கொண்டிருக்கும்போது, உங்களுக்காக நான் உண்மையுள்ளவனாய் இருக்கமுடியாது. நீங்கள் உங்கள் உறவினர்கள் அல்லது சுற்றியுள்ள ஜனங்களால் துன்பமடையும்போது அல்லது நீங்கள் இயேசுவை பின்பற்றுவதினிமித்தம் உபத்திரவமடைந்து அல்லது உங்கள் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு போன்ற துன்பங்கள் அடையும்போது "நீங்கள்தான் உண்மையுள்ளவராய் இருந்திட வேண்டும். இது, கிறிஸ்துவின் பாடுகளில் ஒரு பங்கேயாகும்.*

*அதுபோன்ற நேரத்தில் களிகூர்ந்து "ஆண்டவரே சபையாகிய உம்முடைய சரீரத்திற்காக, உம்முடைய பாடுகளில் கொஞ்சத்தை நிறைவேற்றும்படி தந்துள்ள சிலாக்கியத்திற்காக உம்மைத் துதிக்கிறேன்" என்றே கூறுவோமாக. இவ்வாறாகவே, பிறருக்கென்று ஒரு ஊழியத்தை நாம் பெற்றிட முடியும்..... அதன் மூலமாகவே, நாம் சபையை கட்டவும் முடியும்!*

*இதனிமித்தமே "கிறிஸ்துவின் பாடுகளின் ஐக்கியத்தில்" நமது பங்கு என அழைக்கப்படுகிறது. தன்னுடைய பாடுகளின் மூலமாய் 'தனக்கென' கிறிஸ்து யாதொரு ஆதாயம் பெறவில்லை! ஆனால், நாமோ அதிகமான ஆதாயம் பெற்று கொண்டோம்!! நாம் கிறிஸ்துவின் பாடுகளில் ஐக்கியம் கொள்ளும்போது, அதிலிருந்து நாம் ஒரு ஆதாயமும் பெறுவதில்லை. அது, சபைக்குரியதேயாகும்! நம்முடைய பாடுகள் மூலமாய், மற்றவர்கள் ஆதாயம் பெறுவார்கள். இந்த உடன்பாடுக்கு உங்களுக்கு விருப்பமுள்ளதா? நீங்கள் மெய்யாகவே....*

> **"ஆம் ஆண்டவரே, நான் அதற்கு இணங்குகிறேன்! நான் உம்முடைய மனதோடும், உம்முடைய ஆவியோடும், உம்முடைய மனநிலையோடும் ஐக்கியமாயிருக்க விரும்புகிறேன்! நான் பாடுபட்டு, என் பாடுகள் மூலமாய் மற்றவர்கள் ஆதாயம் பெறுவதற்கு நான் விரும்புகிறேன்"**

*என்று நீங்களும் கூறுவீர்கள் என்றே நம்புகிறேன்.*

*ஒரு கரும்பு எந்திரத்தில், கரும்பு எவ்வாறு பிழியப்படுகிறது என அறிவீர்களா? சில கரும்புகளை அந்த எந்திரத்திற்குள் விடும்போது, அது நசுக்கிப் பிழிந்து, சாறு வெளியே வருகிறது. இவ்வாறு சிலமுறை செய்து முடித்ததும் அந்த கரும்பிலிருந்து எல்லா சாறும் வந்துவிட்டது என்றே நாம் எண்ணுவோம். ஆனால் இன்னமும் இல்லை.... அதை மீண்டும், எந்திரத்தில் வைத்து பிழிந்து கடைசி சாறையும் எடுத்து விடுகிறார்கள். அந்தக் கரும்பு, யாருடைய நன்மைக்காக பிழியப் படுகிறது? யாரோ சிலர் அதை பானம் செய்வதற்கே!* **இவ்வாறாகவே, நம்மைப் பிறருக்கு ஆசீர்வாதமாய் மாற்ற தேவன் செய்கிறார்!** *ஜீவியத்தின் உபத்திரவங்களான சூழ்நிலைகளில், நாம் நசுக்கப்பட்டு பிழியப்படுகிறோம்..... அச்சமயத்தில், நம்மை நாமே தாழ்த்தி, அதை சந்தோஷத்துடன் ஏற்று கொள்ளுகிறபடியால்..... அந்த நசுக்கப் படுதலிலிருந்து கிறிஸ்துவின் பிரகாசமான அழகும், நறுமணமும் வெளிப்படுகிறது. இவ்வாறாக நாம் யாவரும் "கிறிஸ்துவின் பாடுகளில் பங்கடைந்து" பிறருக்கு ஆசீர்வாதமாயிருந்திட முடியும்!*

*– சகரியா பூணன்*

## மறுமணம் மறுத்து, கிறிஸ்துவுக்கே தத்தம் செய்தேன்!

**க**ர்த்தர் என்னிடம் நிகழச்செய்த 'பலத்த கிரியையை' நான் கண்டேன். 'சிருஷ்டிக்கப்பட்டவைகளின் மீது' நான் வைத்திருந்த உணர்வுகளை கொஞ்சம் கொஞ்சமாய், ஒரு மேலங்கி நழுவுவதைப் போல், என்னைவிட்டு களைந்து விழுந்தது. **இதுபோன்ற கிருபைக்கு,** நான் தேவனுக்கு எவ்வளவு நன்றி சொல்லிட முடியும்? என திகைத்து நின்றேன். இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் **'எனக்கென்று எதுவுமில்லை' என உணர்ந்தேன்!** சிருஷ்டிக்கப்பட்டவைகளின் மீது கொண்ட என் விருப்பத்தை களைந்து போடும் பகுதிகளில், 'என் விருப்பம்' குறுக்கிட்ட போதெல்லாம், 'அவருடைய ஆசீர்வதிக்கப் பட்ட பிரசன்னம்' என்னைவிட்டு விலகுவதைக் கண்டு மகா துக்கம் அடைந்தேன்! 'நானும் என் தேவனும் கொண்ட அந்நியோன்யம்' எவ்வளவு விலையேறப்பெற்றது என தேவன் எனக்கு அதிக அதிகமாய் காண்பித்தார்!

எனக்கென்று நான் பெற்றிருந்த உயர்ந்த நற்குண மதிப்புகளும், எண்ணங்களும், ஒவ்வொரு நாளும் சிதைந்து நஷ்டமடைவதையும் நான் நன்கு அறிய முடிந்தது! என் நற்குணங்கள் என் கண்களுக்கு முன்பாகவே தூஷிக்கப்பட்ட போதெல்லாம்.... நானோ, அதை மறுத்து நியாயப்படுத்தவோ அல்லது தனிமையில் 'சுயமாய் புலம்பி அழுதிடவோ' என் கர்த்தர் அனுமதிக்கவில்லை! நான் கர்த்தருக்கென்று வெளியே சென்று, சேரி மக்களிடம் பணியாற்றிய ஊழியம் நின்றுபோனது! அடிக்கடி ஆலயத்திற்குச் சென்று தனிமையில் ஜெபித்திடும் வாய்ப்பும் நின்று போனது! இவ்வாறாக, தேவன் எனக்கு அமைத்த நிலையில்....

> **'நான் தீது பேசப்பட்டது' நன்மையாகவே மாறியது. அதாவது, என்னைக் குறித்து நான் வைத்திருந்த மதிப்புகளும், பிறர் என்மீது கொண்ட ஆவிக்குரிய மதிப்புகளும் வெகுவாய் சிதைந்தது! இது, முன்பு எனக்குள் இருந்த தவறான அடிச்சுவடுகளைத் திருப்பி, கிறிஸ்துவின் உயர்ந்த அடிச்சுவடுக்குள் நான் நடந்து சென்றிட உதவியதைக் கண்டேன்! அதில் நான் பெற்ற 'பரம இன்பம்' என் உள்ளத்தை பூரிக்கச் செய்தது.**

நான் வெகு இளமையான விதவையாய் இருந்தபடியால் 'இளவரசி அந்தஸ்தில்' இருந்த என்னை மறுதிருமணம் செய்ய அநேக கனவான்கள் முன் வந்தார்கள். இந்நாட்களில் நான் சந்தித்த வெளிப்புறமான துன்பங்களும், இருதயத்தின் ஆழத்தில் சம்பவித்த துன்பங்களின் மத்தியிலும் **இந்த மறுமணம்** ஆறுதல் செய்யுமோ? என

*சற்று திகைத்தேன். ஆனால் கணப்பொழுதில் என் மதிமயக்கத்திலிருந்து விடுதலை பெற்றேன்! நான் திடமான உறுதியோடு தேவனிடத்தில் திரும்பி "ஓ என் தேவனே, இந்த பிரான்ஸ் நாட்டு அரசன் என்னை திருமணம் செய்ய முன் வந்தாலும், நான் மனப்பூர்வமாய் அவரை மறுத்து விடுவேன்! என் தேவனே, என் உள்ளம் நீர் அறிந்திருக்கிறீர். ஒரு இளம் விதவையான எனக்கு ஏற்படும் அளவு கடந்த துன்பங்கள் நடுவில்,* **நான் உம்மிடம் உறுதியாகக் கூற விரும்புவதெல்லாம்: 'நான் உமக்கு மாத்திரமே சொந்தம்!'** *இப்படி நான் கூறியது, என் தகுதிக்கு மிஞ்சி நான் கூறியதாக நீர் எண்ணினால்.... என் முழு பெலத்தோடும் நான் உமக்கு உண்மையுள்ளவளாய் வாழுவேன் என்ற ஆறுதலே எனக்குப் போதும்!" என தேவனோடு கண்ணீர் கசிந்திட வேண்டினேன்.*

*இவ்வாறு நான் அந்தரங்கத்தில் தேவனோடு செய்து கொண்ட என் உடன்படிக்கையை, நான் ஒருவரிடமும் கூறவில்லை. அவ்வப்போது, என்னை மறுமணம் செய்ய வந்த குடும்பங்களுக்கும் எடுத்துரைக்கவில்லை! ஆகிலும், அவர்களுக்கு உறுதிபட என்னை மறுத்து விலகி நின்றேன். என் மாமியார், விதவையான என்னைத் தொடர்ந்து பகைத்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். எப்படியெனில், நான் உறுதிபட 'மறுமணம் செய்யாதிருப்பதைக் கண்டு' அதை எனக்கு விரோதமாய் பேசத் தொடங்கினார்கள். 'இவளை யார் திருமணம் செய்வர்கள்?' என்று அநேகரிடம் பகடியாகக்கூறினார்கள்!*

*– மேடம் குயான்*

---

## மனச்சோர்வு ஏன்? அவர் உங்களைவிட்டுப் போகவில்லை!

*இன்று அநேக கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் 'மன உளைச்சல்' என்னவென்றால், தேவன் தங்களைவிட்டு தூரமாயிருக்கிறார்! என்ற உணர்வேயாகும். இதுபோன்ற இடைவெளியில் நாம் துன்புறும் நேரத்தில் "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பது" கடினமல்லவா? அப்படியிருக்க விரும்புவது 'சூரியன் இல்லாமல்' வெப்பம் தரும் பிரகாசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிப்பதைப்போலாகும்!*

*வான மண்டலங்களின் தாற்பரியத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள்! தேவன் ஆவியாயிருக்கிறார்.... 'ஆவி' ஒருபோதும் வான மண்டலத்தில் வாசம் செய்வதில்லை. 'விண்வெளி' 'பொருளை' சுற்றி வருவதாகும். ஆனால், ஆவியோ முழு சுதந்திரம் பெற்றதாகும்! ஆகவே, பொருளைச் சுற்றி நெருங்கி வருவதைப்போல், நாம் ஒருபோதும் தேவனை சிந்திக்கக்கூடாது. அல்லது, பொருளைவிட்டு*

*தூரம் சென்று விட்டதாகவும் தேவனை சிந்திக்கக்கூடாது.* **தேவன் அளவற்றவர்!** *அந்த அளவற்ற தேவனுக்குள் 'விண்வெளியும்' அடங்கும். "எதைக் கொண்டும் அவரை கொண்டிட முடியாது! ஏனெனில், சகலமும் அவர் கொண்டிருக்கிறார்!"* (2நாளா.6:18). இருப்பினும், தேவனைவிட்டு மனிதன் தூரமாய் இருக்கிறான் என கூறுவதில் உண்மை இருக்கிறது. இஸ்ரவேலுக்கு ஆண்டவர் கூறும்போது *"அவர்களின் இருதயம் என்னைவிட்டு தூரமாயிருந்தது" என்றே கூறினார். எனவே தேவனுடைய உறவில், நாம் தூரமாய் இருப்பதற்கோ அல்லது அருகில் இருப்பதற்கோ விளக்கம் உண்டு! அது சரீரப் பிரகாரமான தூரமல்ல. 'சுபாவத்தைப் பற்றிய' தூரமாயிருக்கிறது....*

'தேவனுடைய ஒத்த சுபாவம் நமக்கு இல்லாதபடியால்' நமக்கும் தேவனுக்கும் தூரம் இருப்பதைக் கண்டு கொள்கிறோம். இதுவே, வேதம் கூறும் தேவனுக்கு 'அந்நியர்' என்பதின் பொருளாகும்.

*வீழ்ச்சியுற்ற மனுஷனுடைய சுபாவம், வெளிப்படுத்தப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சுபாவத்திற்கு எதிராயிருக்கிறது.* **'கற்பு நெறியில்'** *ஒரே சாயல் இல்லாதபடியால், தேவனோடு ஐக்கியம் இருப்பதில்லை. ஆகவேதான், அவர் நம்மைவிட்டு 'ஆகாய விரிவளவிற்கு' தூரம் சென்று விட்டதாக உணர்கிறோம்! இதனிமித்தமே, அநேகர் தங்கள் ஜெப ஜீவியத்தில் தளர்ந்து, பாவியாகிய அவர்கள் 'ஜீவனை விசுவாசிக்க முடியும்' என்ற சத்தியத்தை இழக்கிறார்கள். அப்போஸ்தலர் 17:22,28 வசனங்கள் கூறும்போது....* **"அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல!"** *எனக்கூறி, நாம் நமக்கே நெருக்கமா யிருக்கிறதைவிட, அவர் நமக்கு நெருக்கமாயிருக்கிறார்! என்ற சத்தியத்தை பிரகாசிக்கிறது. ஆனால், நடைமுறை ஜீவிய அனுபவத்தில், தன்னை பாவி என்ற உணர்வுடையவன், தன்னை விட்டு தூரமாயிருக்கிற அவரோடு 'பாலம்'* (Bridge) *அமைத்திட முடியுமா? இதற்கு விடை யாதெனில்: அது அவனால் முடியாது! என்பதுதான். ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷ மகிமை கூறும் விடை யாதெனில்:* **அது, கிறிஸ்துவால் முடியும்!** *என்பதுதான் (கொலோசெயர்.1:21,22). ஆகவே கிறிஸ்து வழங்கும் "மறுபிறப்பு" திவ்விய சுபாவத்தில் நம்மை பங்கடையச் செய்கிறது. இவ்வாறாக "நாம் அவரைப்போல் இல்லாத சுபாவத்தின் சிக்கலான முடிச்சுகள்" தகர்க்கப்பட்டு, தேவனே நமக்கு ஆரம்பமாகிறார்! இந்த நல்ல ஆரம்பத்தைப்பெற்ற ஒரு ஆத்துமா,* **பரிசுத்தாவியின் கிரியையின் மூலமாய்** *சுத்திகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப் பட்டு.... தேவன் திருப்தி அடையும் அளவிற்கு, சுத்திகரிப்பின்*

வாழ்வில் முன்னேறிச் செல்கிறது.

ஆகிலும், மறுஜென்மம் பெற்று புதிய ஆரம்பத்தில் வளரும் ஒரு ஆத்துமா கூட 'அவ்வப்போது' தேவன் என்னைவிட்டு தூரமாய் போனாரோ? என்ற உணர்வினால் பாதிக்கப்பட முடியும். அது ஏதாகிலும் பல காரணங்களுக்கு உட்பட்ட மனச்சோர்வாய் இருக்க முடியும். பேதுரு அடைந்த மனச்சோர்வு 'தன் குருவை மறுதலித்த' காரணமாயிருந்தது.

**ஆகவே உங்கள் மனச்சோர்விற்கு, என்ன காரணமிருந்தால் என்ன? அது உங்கள் உணர்வில் தோன்றிய தற்காலிக இடைவெளியேயாகும். இவ்வித இருளான நேரத்தில், 'வெளிச்சம் வரும் என' விசுவாசத்துடன் காத்திருங்கள்!**

இரண்டாவதாக, விசுவாசிக்கும் நீங்கள் தைரியமாய் தேவனுக்கு முன் சென்று உங்கள் உள்ளான ஜீவியத்தை சோதித்துப்பாருங்கள்! தவறான நோக்கங்களோ? பொல்லாத சிந்தைகளோ? நீதிக்குரிய பிழைகளோ? இதுபோன்று 'தேவனைப்போல் அல்லாத தவறுகள்' அல்லது பாவங்கள் உங்களையும் தேவனையும் 'மனஅளவில்' பிரித்து விடக்கூடும்! நீங்கள் மாத்திரம், உணர்த்தப்பட்ட பகுதிகளை விட்டு விட தீர்மானித்து விட்டால் 'அவர் உங்களிடம் நெருங்கி வந்ததை' நீங்கள் மீட்டுக் கொள்வீர்கள்!

**ஒரு உண்மை அறியுங்கள்.... உங்களிடம் முதலாவது எங்கே இருந்தாரோ, அங்கிருந்து அவர் போகவில்லை, அவர் அங்கேயேதான் இருக்கிறார்!**

நம் மனச்சோர்வை அகற்றும் இந்த ஒப்பற்ற சுவிசேஷத்திற்காக தேவனுக்கு நன்றி கூறுங்கள்! ஆமென்.

– *A.W.* டோசர்

---

## 'நெருப்பு மாத்திரமே' நெருப்பைக் கொளுத்திட முடியும்!

**நெ**ருப்பு மாத்திரமே நெருப்பை பிறப்பிக்க முடியும்! எரியக் கூடிய பொருட்கள் பக்கத்தில் இருந்தாலும், எரிந்து கொண்டிருக்கும் நெருப்பு அதைப் பற்றிப் படரச்செய்யும். இதை யாக்கோபு தன் நிருபத்தில் கூறும்போது "பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விட்டது!" எனக் கூறினார். நெருப்பிலிருந்து, எக்காலத்திலும் 'குளிர்ச்சியான பனி' தோன்றவே தோன்றாது! இதுதான் பரிசுத்தவான்களின் உறுதியான வாழ்க்கையும்! ஜெப ஜீவியமுமாய்! இருக்கிறது.

பிசாசு, எக்காலத்தும் பரிசுத்தவான்களை உருவாக்கிட முடியாது! அதுபோலவே ஜெப வாழ்க்கை இல்லாத போதகர்கள் 'ஜெபத்தில்

மன்றாடும் வீரர்களை' எழுப்பிட இயலாது! அக்கினி குண்டத்திலிருந்து **ஒரு குறட்டில் எடுக்கப்பட்ட கங்கு,** ஒரு நகரத்தையே எரித்து விட்டது! எனச் சரித்திரம் கூறுகிறது. எரிந்து கொண்டிருந்த ஒரு மெழுகுவர்த்தி, பத்தாயிரம் மெழுகுவர்த்திகளைப் பற்ற வைத்திட முடியும். அவ்வாறாகவே, பரிசுத்தவான் டேவிட் பிரைனார்டின் வாழ்க்கை இருந்தது. தேவனுடைய பரந்த நட்சத்திர மண்டலத்தில் பிரகாசிக்கும் அநேக நட்சத்திரங்கள் 'இணையற்ற டேவிட் பிரைனார்டின் ஜெப வாழ்க்கையிலிருந்து' தங்கள் ஆரம்ப நெருப்பை தங்கள் நெஞ்சத்தில் பெற்றார்கள் எனக்கூறலாம்!

வில்லியம்கேரி, பேசன், மச்செயின், யோனத்தான் எட்வர்ட்ஸ், ஜாண்வெஸ்லி, இன்னும் பலர் இந்த தேவ மனிதனின் நெருப்பிலிருந்து தங்கள் ஆரம்ப நெருப்பைப் பெற்றவர்கள்!

ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வர பேராார்வம் கொண்ட **வில்லியம் கேரி,** தற்செயலாய் டேவிட் பிரைனார்டு ஜீவிய சரிதையை படித்தார். கேரியின் உள்ளத்தில் பிடித்துக்கொண்ட நெருப்பு, முடிவில் இந்தியாவின் தீபகற்பத்திற்குள் கொண்டு வந்து நிறுத்தியது! உருகி உருக்குலைந்த பிரைனார்டின் ஆத்துமாவில் வழிந்த நெருப்பு பிழம்பு **'பேசனின்'** இருதயத்தில் தீப ஒளி ஏற்றியது! தனது 20வது வயதில், பிரைனார்டின் 'நாட்குறிப்பை' படித்த பேசன், தன்னில் நெருப்பைத் துவக்கிய டேவிட் பிரைனார்டை காட்டிலும் ஓங்கி நின்ற ஜெப வீரனாய் தேவனுடைய கரத்தில் மிளிர்ந்தார்! **ராபர்ட் மச்செயின்** என்ற மாபெரும் ஜெப வீரனான பரிசுத்தவான், தனது 29வது வயதில் 'முதிர்ச்சியடைந்த ஜெபவீர தூயனாய்' மரணத்தைத் தழுவினார். அவர் பெற்ற அணையாத அந்த தீபம், டேவிட் பிரைனார்டின் நெருப்பிலிருந்து தோன்றியதே ஆகும்!

ஆத்தும ஆதாயப் பணியில், தியாகத்தில் விழைந்த **யோனத்தான் எட்வர்ட்ஸ்,** தன் மகள் ஜெருசாவின் வீட்டில், வியாதிப்படுக்கையில் தன் கடைசி நாட்களை வாழ்ந்த பிரைனார்டை உன்னிப்புடன் கவனித்துப் பார்த்தார். டேவிட் பிரைனார்டு, தன் வீட்டில் மரித்ததற்காக யோனத்தான் எட்வர்ட்ஸ் தேவனுக்கு மிகுந்த நன்றி கூறினார். இந்த தேவ மனிதன் கூறும்போது, "டேவிட் பிரைனார்டு என் வீட்டில் மரிப்பது, அவரது அநாதி தீர்மானம் என்றே கூறுவேன். அவர் ஜெபித்த ஜெபங்களைக் கேட்டேன், என் உள்ளத்தை உருக்கிய அவரது ஜெபங்களுக்கு அடுத்ததாக, அவரது முழு அர்ப்பண ஜீவியத்தையும் பார்த்தேன்! **மெல்ல அணைந்து கொண்டிருந்த அந்த நெருப்பில், அவரது ஜீவிய மாதிரியை முழுவதுமாய் படித்தேன்**" என தன் புத்தகத்தில்

*யோனத்தான் எட்வர்ட்ஸ் எழுதி வைத்தார்.*

*பிரைனார்டு மரித்துக்கொண்டிருந்த அந்த காலத்தில்,* **ஜாண் வெஸ்லியை** *வல்லமை நிறைந்த, ஆத்தும ஆதாய வீரனாய் தேவன் எழுப்பி இருந்தார். அவரது நாட்களில்* **மூன்று நாடுகளை சுவிசேஷ நெருப்பினால்** *நிறைத்த ஜாண்வெஸ்லி, ஒரு பெரிய கான்பரன்ஸ் கூட்டத்தில் "இன்று கர்த்தருடைய ஊழியம் சிதைந்து சீரழிந்து கொண்டிருக்கும் காலத்தில், அதை மீண்டும் அனல் கொண்டதாய் மாற்றுவதற்கு என்ன வழி உண்டு?" என ஆதங்கத்தோடு கர்ஜிக்கும் தொனியில், கூடியிருந்த பல்லாயிரம் மக்களிடத்தில் கேட்டார். தானே கேள்வியை எழுப்பி, அதற்கு தானே விடையைத் தந்த ஜாண்வெஸ்லி "ஊழியமென்று, தேவனின் அழைப்பிற்குத் தன் வலது காலை முன் வைத்திருக்கும் பிரசங்கிகளே, போதகர்களே, நீங்கள் யாவரும் டேவிட் பிரைனார்டின் வாழ்க்கை சரிதையை கண்டிப்பாய் படிக்க வேண்டும்!" என விடை தந்தார்! பாருங்கள், டேவிட் பிரைனார்டு என்ற* **இந்த ஒரு நெருப்பு,** *அநேக நெருப்புகளைப் பற்ற வைத்து, உத்தம தாசர்களை எழுப்பியதைப்போலவே, தொடர்ந்து அந்த நெருப்பு.... என்னையும் உங்களையும் கொளுத்தி எரியச் செய்வதாக!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

## 'இயேசுவை இன்னார்' என அறியாமல், ஜீவன் இல்லை!

*இறைவனை இறைவன்தான் அறிவார்! தெய்வத்தை தெய்வம் தான் வெளிப்படுத்தக்கூடுமேயன்றி, வேறு எவ்வளவு மேலான சிருஷ்டியாலும் முடியாது! மண்பாண்டம் தன்னை உண்டு பண்ணின குயவனுடைய திறமையை வெளிப்படுத்தலாம்! குயவனின் குணத்தை, தன்மையை, வெளிப்படுத்தாது!! சிருஷ்டியானவன், சிருஷ்டிகரை எப்படி வெளிப்படுத்த முடியும்?*

**கிறிஸ்து தேவனை வெளிப்படுத்துகிறது உண்மையானால், அவர் சிருஷ்டியல்ல வென்றும், 'மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன் என்றும்' அறிகிறோம் (1தீமோ.3:16).**

*இப்படிப்பட்ட தெய்வீக புருஷரை மற்ற மனுஷரோடு ஒப்பிட்டுப் பேசும் மதியீனம் கிறிஸ்தவர்களுக்குள் காணப்படுவது எவ்வளவு பரிதாபம். தோமா அவரைப் பார்த்து: 'என் ஆண்டவரே, என் தேவனே' என்று போற்றினபோது: "மனுஷனான என்னைத் தேவன் என்றழைப்பது தேவ தூஷணமாகுமே" என்று கடிந்து கொள்ளாமல், என்னைக் கண்டபின்தானா இந்த விசுவாசம் உனக்கு வந்தது? என்று கேட்டார். இயேசுவானவர் ஜனங்கள் மத்தியில் சஞ்சரித்து ஊழியம் செய்துவந்தபோது, அவர்கள் தம்மை*

இன்னாரென்று அறிந்துகொள்ள வேண்டுமென்பதே அவருடைய முழு நோக்கமாயிருந்தது! **ஜனங்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள்?** என்று மனுஷருக்குள் கேட்கிற வழக்கமில்லை. மோசே ஜனங்களைப் பார்த்து: நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்? என்று கேட்டால், ஏன், நீர் மோசே என்று எங்களுக்குத் தெரியாதா? என்பார்கள். எலியாவோ, பவுலோ.... யார் கேட்டாலும், உடனே இன்னாரென்று சொல்லிவிடுவார்கள். இயேசுவானவரைப்பற்றியோ அப்படிச் சொல்ல ஏதுவில்லை! **அவர் ஜனங்கள் நடுவில் மெய் மனுஷனாகச் சஞ்சரித்தார்.** அப்படியிருந்தும், அவரோடு கூடவேயிருந்த சீஷர்களும், அவரைக் கவனித்த மற்ற வர்களும், இவர் யாரோ, இவர் எப்படிப்பட்டவரோ! என்று பிரமித் தார்கள். அவரைச் **சாதாரண மனுஷனாக** எண்ண இடமில்லை. ஜனங்கள் பேசிக்கொண்டபடி அவரை எலியா, எரேமியா, தீர்க்க தரிசிகளில் ஒருவர் என்று தீர்மானிக்கவும் வழியில்லை. இக்காலத்தில் **சிலர் அவரை 'மனுஷனுக்கு மேற்பட்டவரென்று'** சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். எவ்வளவு மேற்பட்டவரென்று இவர்கள் சொல்லுகிறதுமில்லை! கிறிஸ்துவுக்குக் கொடுக்க வேண்டிய தெய்வீக ஸ்தானத்தை அவருக்குக் கொடுக்காமற்போனால், நமது ஊழியம் மாயமும் உண்மையற்றதுமாகும்.

**கண்காணியராகட்டும், மிஷனெரிகளாகட்டும், போதகர்களாகட்டும், கிறிஸ்வின் தெய்வீகத்தை, அவர் தெய்வத்தில் தெய்வமானவரென்பதையும், அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட இம்மானுவேல் என்பதையும் நம்பாமல்! அவர் பேரைச் சொல்லிக்கொண்டு எத்தனை ஊழிய வேலை செய்தாலும், அவ்வளவும் அபத்தமாகும்.**

ஆம், கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படி வந்த சத்திய ஆவியானவர், உண்மையற்றவர்களை உபயோகிக்கமாட்டார்.

கிறிஸ்துவுக்குரிய இந்த தெய்வீக அறிவின் மேன்மைக்காகவே, பவுல் தனக்கு மேன்மையும் லாபமுமாயிருந்த யாவையும் குப்பையாகத் தள்ளினார். **இந்த அறிவின் பலத்தினாலே** மகத்துவமான ஊழியங்களைச் செய்தார். 'கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் **அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்**' என்று பேதுரு சொல்கிறார். நமது வளர்ச்சிக்குத் தக்கப்படிதானே சபையாரும் வளருவார்கள். இது வேத சாஸ்திரக் கல்விச்சாலையில் கற்றுக் கொள்ளும் அறிவல்ல. அவைகளில் மிகுதியானவற்றைச் சீக்கிரம் மறந்துவிட்டால் நல்லது! சில வருஷங்களுக்கு முன் நான் பெங்களூரில் கூட்டங்களை நடத்திக்கொண்டிருந்தபோது, ஐக்கிய வேத சாஸ்திரக் கல்லூரியில், மாணாக்கரோடு தங்கியிருந்தேன். அவர்களும்

கூட்டங்களுக்கு வந்தார்கள். ஒரு நாள் நாங்கள் பேசிக் கொண்டிருக்கையில், மெதடிஸ்து மிஷனைச் சேர்ந்த ஒருவர் அச்சமயம் என்னைப் பார்த்து: இந்த வேத சாஸ்திரக் கல்வியைக் கொண்டு நாங்கள் கிராமச் சபையாருக்குமுன் நிற்போமானால் ஒருவரும் எங்களைத் தீண்ட மாட்டார்கள். எப்படிப் பிரசங்கிக்க வேண்டும் என்கிற முறையை எங்களுக்குக் கற்றுக்கொடுங்கள் என்றார், கற்றுக்கொடுக்கக்கூடிய முறை ஒன்றுமில்லை. கிறிஸ்துவை அறிகிற மெய்யான அறிவும்! அவர் மீதுள்ள அன்பும்! உத்தம ஊழியத்தின் லட்சணங்களாகும் என்றேன். இருதயத்தின் நிறைவின்படி வாய்பேசும். ஆண்டவர் தமது வசனத்தைக்கொண்டு **ஆவியின் மூலமாய்** தம்மை நமக்குள் வெளிப்படுத்துகிறார். **இதுதான் அனுபவ அறிவு.** *நமக்குள் பாவத்தை உணர்த்தும் அறிவு! உலகத்தின் அசுத்தங்களிலிருந்தும், சகல பாவங்களிலிருந்தும் நம்மை விடுவிக்கும் அறிவு! ஆவிக்குரிய பரம லட்சணங்களால் நம்மை அலங்கரிக்கும் அறிவு! கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக நம்மை மறுரூபமாக்கும் அறிவு! இவ்வாழ்வுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய நன்மைகளை நமக்குக் கொடுக்கும் அறிவு! மற்றவர்களை ரட்சித்துக் கொள்ளும்படியான ஆத்ம வாஞ்சையை நமக்குள் உண்டாக்கும் அறிவு! ஜீவதண்ணீருள்ள நதிகள் போல் அநேகருக்கு நம்மை ஆசீர்வாதமாக்கும் அறிவு! நித்திய மகிமைக்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கும் அறிவு! ஆம், பேதுரு சொல்லுகிற படி இந்த அறிவு நம்மை 'வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது' இவை வீண் அலங்கார வார்த்தைகள் அல்ல.* **அவரை அறிந்தவர்களுக்கு மாத்திரமே இதன் உண்மை தெரியும்!!** *இந்த அறிவுன் வளர்ச்சி இலேசாய் கிடைப்பதில்லை. பவுல் தமக்குள்ளதெல்லா வற்றையும் விற்று, விலையேறப்பெற்ற பொக்கிஷமாகிய கிறிஸ்துவின் அறிவைச் சம்பாதித்தார்! அல்லேலூயா.*

– *பரமானந்தம் ஐயர்*

---

## 'துன்மார்க்கத்தில் வீழ்ந்த பிள்ளையை' தூக்கிவிடும் வீரத்தாய்!

**உ**ங்கள் பிள்ளை ஓர் கெட்டப் பழக்கத்திற்கு அடிமையாகி யிருந்தால், அதற்காக அவனைக் குற்றப்படுத்தாதிருங்கள். ஏற்கனவே அவன் தீமைக்குள்தான் விழுந்து கிடக்கிறான். அதிலிருந்து விடுதலையாக விரும்பினாலும், அவனால் முடியவில்லை! இவ்வேளையில், உங்களையும் கூட நீங்கள் நொந்துகொள்ள வேண்டாம்! "நான் மாத்திரம் சற்று ஞானமுள்ள தாயாக இருந்திருந்தால்...." என்றெல்லாம் புலம்புவதற்கு இது நேரமல்ல!

எந்த தாயும் பூரணமானவளல்ல. நாம் யாவருமே நம்மால் முடிந்த சிறந்த வைகளையே செய்தாலும், அநேகம் தவறுகளையும் செய்துவிடுகிறோம்.

இவ்வாறு உங்களைச் சஞ்சலப்படுத்தும் வீழ்ச்சியோ அல்லது தவறோ போன்ற எதுவாயிருந்தாலும், அதை ஆண்டவரிடத்தில் அறிக்கைசெய்துவிட்டு கடந்து சென்றுவிடுங்கள்! நடந்த நிகழ்ச்சி களுக்கான மன வருத்தங்களையும் குற்ற உணர்ச்சிகளையும் புறம்பே தள்ளிவிடுங்கள்! "**தன்னையே குற்றப்படுத்திக்கொள்ளும் செயல்**" சாத்தானின் கூர்மையான அம்புகளில் ஒன்றாகும்! அதன் மூலமாய் எண்ணற்ற தேவனுடைய பிள்ளைகளை அவன் காயப்படுத்தி, நிலைகுலையச் செய்து, "ஜெபமற்றவர்களாய்" மாற்றிவிடுகிறான்.

நம் பிள்ளைகளின் ஜீவியத்திற்காகப் போராடும் "போர்க்களத்திலன்றோ" நாமும் நின்று கொண்டிருக்கிறோம்! ஆகவே, நம் பெலனையெல்லாம் வீணான அழுகையில் விரயமாக்காதிருக்கக்கடவோம்!

நமக்கோ, ஒன்று செயலாற்றப்பட வேண்டும்... அது இப்போதே செயலாற்றப்படட்டும்! நீங்கள் செயலாற்ற முன் வந்து, **உங்கள் பிள்ளையோடு பேசும் வேளையில்** உங்களுக்கு உதவி செய்யும்படி தேவனிடத்தில் கேளுங்கள். பல வருடங்களாய் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நடுவாய் எழும்பி விட்ட 'தடைச்சுவர்களை' தேவனே தகர்த்தெறிவாராக! உங்கள் கண்ணீரின் விண்ணப்பங்கள், தேவ சமூகத்தை எட்டியதையும், உங்கள் மகன் அல்லது மகளிடத்தில் அற்புதங்களைச் செய்வதையும் நீங்கள் காண்பீர்கள்!

உங்கள் பிள்ளை "நிர்க்கதியாய்" இருக்கிறபடியால் உங்கள் **பிள்ளைகளின் சார்பாகவே நீங்கள் நின்று ஜெபம் செய்திட** அவசியமாய் இருக்கிறது. இவ்வேளையில் தாயாகிய நீங்கள்தான் பெலன் கொண்டவர்களாய் இருக்கவேண்டும். சிங்கத்தின் வாயிலிருந்து ஒரு ஆட்டுக்குட்டியைத் தாவீது காப்பாற்றியதைப் போல், நாமும் நம்முடைய பிள்ளைகளை சாத்தானின் வாயிலிருந்து காப்பாற்ற வேண்டும். நீங்களோ இன்றுவரை ஓர் பெலஹீனம் கொண்ட கோழைப் பெண்ணாய் இருந்து விட்டீர்கள். இப்போதோ எழுந்து நில்லுங்கள்! உங்கள் கண்ணீரைத் துடைத்துப்போடுங்கள்! வானமண்டலத்தின் துரைத்தனத்திற்கெதிரான யுத்தத்தில் சேர்ந்து கொள்ளுங்கள்!! சாத்தானை எதிர்த்து, அவனை உங்கள் குடும்பத்தை விட்டே விரட்டியடிப்பதற்கு.... ஜீவ அப்பத்தைப் புசித்து, தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தை வீரத்தோடு கையாளுங்கள்! இயேசுவின் நாமத்தில் அவனைக் கடிந்து கொள்ளுங்கள்! அப்போது, ஆண்டவர் நமக்கு வாக்குரைத்தபடி..... **மின்னல் வேகத்தில்**

**அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்!** *(யாக். 4:7, லூக்கா 10:18).*

*இதுபோன்ற சமயங்களில் "தேவனுடைய வார்த்தையே" உங்களுக்கு அருமையாய் இருந்திட வேண்டும். உங்கள் பிள்ளைகள் நிமித்தம் ஏற்பட்ட துயர சம்பவம் உங்கள்* **ஆவிக்குரிய சத்துவத்தைப்** *பறித்துக் கொள்ள அனுமதிக்காதிருங்கள். துன்பத்தின் ஆழத்திலிருக்கும் இவ்வேளையில், தேவனுடைய ஆச்சரியமான வாக்குதத்தங்களே உங்களைப் பாதுகாத்திட முடியும்! இவ்வேளைகளில் தாவீதின் சங்கீதங்களை வாசித்து தியானியுங்கள். துக்கமும் துன்பமும் சூழ்ந்த வேளைகளில்* **சங்கீத வசனங்கள்** *நம் ஆவியை உயிர்ப்பித்து நம்மைத் தூக்கி எடுக்க விசேஷ வல்லமை கொண்டதாயிருக்கிறது! தாவீதின் அனுபவத்தைப் போலவே, நீங்களும் தேவனிடத்தில் சென்று "எனக்கு அனுகூலமான ஓர் அடையாளத்தைக் காண்பித்தருளும்" (சங்.86:17) என கேட்டு, வாக்குதத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்:*

*"வெட்டுக்கிளிகள் பட்சித்த வருஷங்களின் விளைவை* **உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்**" *(யோவேல்.2:25). "வாக்குதத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர்.... அவர்* **சொல்லியும் செய்யாதிருப்பாரோ?**" *(எபிரெயர் 10:23, எண்ணாகமம் 23:19).*

*"முந்தின மகிமையைப் பார்க்கிலும்* **பிந்தின மகிமை பெரிதாயிருக்கும்**" *(ஆகாய்.2:9).*

"**நாங்கள் எதிர்பார்த்திராத** *பயங்கரமான காரியங்களை நீர் செய்தீர்" (ஏசாயா.64:3).*

*"நீங்கள் எல்லாவற்றிலும் எப்போதும் சம்பூரணமுடையவர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில்* **சகலவித கிருபையையும் பெருகச் செய்ய** *வல்லவராயிருக்கிறார்" (2கொரி.9:8). இந்த வாக்குதத்தங்கள் அனைத்தும், தீர்க்கதரிசனமானவைகள்! வல்லமை நிறைந்தவைகள்! இந்த வசனங்கள் நமக்கு நிச்சயமாய் அற்புதங்களைச் செய்துவிடும்!*

"ஆச்சரியமே, அதிசயமே கர்த்தரின் வார்த்தைகள்!
அவ்வேடுகளில் மலர்ந்த ஞானங்கள் - அனைத்தும் உண்மைகள்
ஆயிரம் ஆயிரம் தடவைகள் வாசித்தாலும்
பழமையாய், அல்லது சலிப்பாய் மாறிடா!
ஒவ்வொரு வரிகளும் பொக்கிஷம்,
ஒவ்வொரு வாக்குதத்தமும் ஓர் முத்து!
அவை தரும் அனைத்துமே முழுமை பாதுகாப்பு!
ஒன்றறிவோம்... காலமும் உலகமும் கடந்துபோம்
எம் தேவனின் வார்த்தையோ நிலைத்திருக்கும்!"

*– ஜூலியா ஸ்டெர்லிங்*

"**தாவீதுக்கு** *அவனுடைய சத்துருக்கள் விரித்த கண்ணிக்குத் தப்புவித்த ஆண்டவர்* **உங்கள் பிள்ளையையும் தப்புவிப்பார்!**" *என்ற ஆச்சரியமான வாக்குதத்தத்தை சங்கீதம் 124:6,7,8 வசனங்களில் வாசித்து, அதை உங்களுக்கென சுதந்தரித்துக் கொள்ளுங்கள்!*

**பிரச்சனைகளின் நடுவில் உங்கள் பிள்ளைக்கு 'வியாதியிருப்பதாகக்' கருதி செயல்படுவதேயல்லாமல், ஓர் 'குற்றவாளியாகக்' கருதி செயல்படாதிருங்கள். உங்கள் பிள்ளையைப் பார்த்து "இதுபோன்ற செயலை நீ எவ்வாறு எங்களுக்குச் செய்யலாம்?"என்ற கசந்த கேள்வியை ஒருபோதும் கேட்டுவிடாதிருங்கள்.**

*"மற்றவர்கள் உங்கள் பிள்ளைகளைக் குறித்து என்ன சொல்வார்கள்?" என நீங்கள் ஒருவேளை வெட்கமடையக்கூடும். ஆனால் நீங்களோ, மனுஷருடைய அபிப்பிராயங்களைக் குறித்து அக்கறைப்படாதிருங்கள். "மனுஷருடைய அபிப்பிராயங்களை குப்பைத் தொட்டியில் தூக்கி எறிந்துவிடு" என என் கணவர் என்னிடத்தில் அடிக்கடி கூறுவார். ஆம், இந்தப் பூமியில்* **எந்த மனிதனைக் காட்டிலும் உங்கள் பிள்ளையே** *விலைமதியா மதிப்பு கொண்டதாகும்! ஆகவே 'உங்கள் குடும்பத்தின் கௌரவம் இவனால், பாதிக்கப்பட்டதே' என அழுது கொண்டு உங்கள் நேரத்தை வீணாக்காதிருங்கள்! அதற்குப் பதிலாய், உங்கள் பிள்ளை தேவனிடத்தில் திரும்பி வரவேண்டுமென்றே, உங்கள் பிள்ளைக்காக அழுங்கள்! அதுபோதும்.*

*சுகமளிக்கும் வார்த்தைகளையும், மன்னிக்கும் வார்த்தைகளையும், விசுவாச வார்த்தைகளையும், ஒப்புரவாக்கும் வார்த்தைகளையுமே உங்கள் பிள்ளைகளிடம் எப்போதும் பேசுங்கள். முதிர்ச்சியடைந்த ஒருவரிடத்தில் நடந்து கொள்வதைப்போலவே, உங்கள் பிள்ளைகளிடமும் நடந்து கொள்ளுங்கள். ஏனென்றால், உங்கள் மகன் அல்லது மகள் 'முதிர்ச்சி அடையும் நிலையை நோக்கியே' வளர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள்!*

*எச்சூழ்நிலையானாலும், விசுவாசத்தோடு ஜெபித்து உங்கள் பிள்ளையை சாத்தானின் வலையிலிருந்து காப்பாற்றுங்கள். இவ்வேளையில் உங்கள் கிறிஸ்தவ நண்பர்களின்* **ஜெப உதவியையும்** *நாடுங்கள். கெட்ட குமாரனைத் தகப்பன் ஏற்றுக்கொண்டது போலவே, உங்கள் பிள்ளையை* "**எந்த நிபந்தனையுமின்றி**" *ஏற்றுக் கொள்ளவே எப்போதும் தயாராயிருங்கள். தேவையானால் மருத்துவ உதவியோ அல்லது படிப்பிற்குரிய உதவியோ அவனுக்குச் செய்திட விருப்பமாயிருங்கள். வாலிபப் பிள்ளைகளிடம் தோன்றும் பிரச்சனைகளைக் கையாளுவதற்கு, நல்ல அனுபவமிக்க சகோதர*

சகோதரிகளும் இருக்கிறார்கள்! தேவையானால், அவர்களின் உதவியையும் நீங்கள் நாடுங்கள். உங்கள் "பிள்ளைகளுடைய பிரச்சனை இன்னதென்று" நீங்களே விளங்கிக் கொண்டால், பிள்ளைக்கு உதவிட எல்லா வகையிலும் முன்வாருங்கள்! எல்லா வற்றிற்கும் மேலாக, இக்கட்டான இச்சமயங்களில் **உங்கள் கணவரோடு ஐக்கியமாயிருந்து உங்கள் பிள்ளைக்காக ஜெபம் செய்யுங்கள்.** வீட்டில் பிரிவினையிருந்தால், பிசாசு "உள்ளே பிரவேசித்திட" இடம் கிடைத்துவிடும். அவருடைய நாமத்தில் **இரண்டு பேர் ஒன்றாயிருந்து** பிதாவினிடத்தில் எதைக் கேட்டாலும், அதை அவர் செய்வாரென்றே இயேசு கூறியுள்ளார்.

ஆகவே, ஒருவருக்கொருவர் 'யார் மீதும்' குற்றத்தைச் சுமத்தா திருங்கள். உங்கள் பிள்ளையின், தான்தோன்றி வாழ்க்கையின் நிமித்தம், 'அவர்கள்' அறுவடை செய்திடும் **விளைவுகளை** நீங்கள் கண்டாலும், "எல்லா மனுஷருக்கும் நம்பிக்கையுண்டு" என்பதை அறிந்தவர்களாய் பிள்ளைகளுக்கு "தைரியம்" காட்டுங்கள். "என் நடைகளைத் தியானித்து என் பாதங்களை உமது கற்பனைகளுக்கு நேராகத் திருப்புவேன்" என்ற அர்த்தத்தோடுதான் சங்கீதம் 119:15 கூறுகிறது. மிகக் கேடான கெட்ட குமாரன், கடைசியாக தன் நடையைத் தகப்பன் வீட்டிற்கு திருப்பி விட்டானே! அந்த கெட்ட குமாரனுக்காய், அவனுடைய பெற்றோர்கள் நிச்சயம் அதிகமாய் கண்ணீர் வடித்திருப்பார்கள்! ஆனால், ஓர் நாள் வந்தபோதோ அவர்களுடைய துக்கத்தின் கண்ணீர்கள் "மகிழ்ச்சியின் கண்ணீர் களாய்" மாறி விட்டதே!

'இப்போது' உங்கள் பிள்ளைக்கு நடந்துவிட்ட செயல்கள் "அதிர்ச்சியளிக்கும்" செயல்களாக உங்களுக்கு இருக்கக்கூடும்...

**ஆனால், எந்த செயல்களும் தேவனைப் பொறுத்தமட்டில் அதிர்ச்சியளிக்கும் செயல்களே அல்ல! என்ன நடக்குமென்பதை அவர் ஏற்கெனவே அறிந்திருந்தார் ... அதற்கு என்ன விடை என்பதையும் அவர் அறிந்திருக்கிறார்!**

ஆகவே, ஒவ்வொரு பிரச்சனைக்கும், ஒவ்வொரு தவறுக்கும் "ஒரு விடையை" அவர் எப்போதும் வைத்திருக்கிறார்! எனவேதான், எந்த இக்கட்டிலிருந்தும் தேவன் நம் பிள்ளைகளை மீட்டெடுப்பார் என்ற முழு நம்பிக்கையோடும் பூரண நிச்சயத்தோடும் நாம் அவரிடம் தஞ்சமாய் ஓடி வந்திட முடியும்!

– ஆனி சகரியா பூணன்

## அப்போஸ்தலனாகிய **பவுல்,** (AD 67)
## "சிறைபிடிக்க முடியாத எழுத்தாணி" கொண்ட தீரன்!



பவுல், ஒரு யூதனாய் மாத்திரமல்ல, ரோமாபுரி குடிமகனாய் இருப்பதற்குரிய அந்தஸ்தைப் பெற்ற சிறந்த கல்விமான்! நியாயப்பிரமாணத்தின்படி குற்றம் சாட்டப்படாதவனும், யூதப் பிரமாணங்களைக் கருத்தூன்றி கற்று தேர்ந்தவன்! அவனுடைய நாட்களில் "இயேசுவின் உயிர்த்தெழுதலும், பரமேறியதும்" மிகுந்த வலிமையாய் விசுவாசிக்கப்பட்டு, இயேசுவின் சீஷர்கள் ஏராளமாய் உருவாகிய காலம். யூத பண்டிதனாகிய பவுல் இதைக் குறித்து ஆத்திரமடைந்தவனாயிருந்தான். ஆகவேதான், இயேசுவுக்கு முதல் இரத்த சாட்சியாகிய ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டதை மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று ரோம அரசின் கீழ் பணியாற்றிய பவுல், அநேக கிறிஸ்தவர்களை இஸ்ரவேலில் கைது செய்து அவர்களை கொலை செய்வதற்கு உறுதுணையாயிருந்தார். அவ்விதமாய் கிறிஸ்தவர்களை சிறைப்படுத்தி கொண்டு வர, தமஸ்கு பட்டணத்திற்கு பயணம் சென்றபோதுதான் வானத்திலிருந்து தோன்றிய சடுதி வெளிச்சத்தில் இயேசு அவனை சந்தித்தார். தன்னை சந்தித்தவர் "உயிர்த்தெழுந்த இயேசு" என கண்ட சவுல் தன்னை முழுவதும் அவருக்கு அர்ப்பணித்து, அன்று முதல் 'பவுல்' என பெயர் கொண்டார்.

இயேசுவின் வலிமையான ஊழியனும் அப்போஸ்தலனுமாகிவிட்ட பவுல் ரோம சாம்ராஜ்ஜியமெங்கும் துரிதமாய் ஓடி ஓடி இயேசுவே இரட்சகர்! இயேசுவே ஆண்டவர்! என பிரசங்கித்தார். ரோம அரசு, பவுலைப் பகைத்தது. பரிசுத்தாவியின் நிறைவினால் நிருபங்கள் பல எழுதி இயேசுவையும், இயேசுவின் சபையையும் தான் பெற்ற வெளிப்பாட்டில் நிலைநிறுத்தி காண்பித்தார். **அவர் ரோமாபுரி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டாலும் 'அவர் எழுத்தாணியை' யாரும் சிறைப்பிடிக்க முடியவில்லை. எவைகளையெல்லாம் 'வேத வாக்கியங்களாய்' தேவன் தர விரும்பினாரோ அவை அத்தனையும், ஒன்றுவிடாமல் பவுல் மூலமாய் தேவன் எழுதி முடித்தார்!**

கொடூர நீரோ மன்னன், கிறிஸ்தவர்களை அழித்து வந்த காலம் அது. பெரும்பாலான கிறிஸ்துவின் தொண்டர்களை இவன் சிலுவையில் அறைந்தான். பவுல் ரோம பிரஜையின் அதிகாரம் பெற்றவராயிருந்தபடியால், கிறிஸ்தவ யூதர்களைக் கொன்று குவித்ததைப் போல், பவுலை சிலுவையில் அறைந்து கொன்று விட நீரோ மன்னனால் முடியவில்லை. ஆகவே, பவுலின் தலையை ஒரு கொடு வாளினால் வெட்டி கொன்றான் என்றே சரித்திரம் கூறுகிறது!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## வாலிபனே "சடிதி மரணத்தில்" நித்தியஜீவனின் அழைப்பை கேள்!

திருமணமாகப்போகும் தனது மணப்பெண்ணுக்கு, மண நாளன்று உடுத்துவதற்காக பட்டணத்தின் அந்த பெரிய ஜவுளிக்கடையில் ஏராளமான புடவைகளைப் பார்த்து ஒதுக்கிய பின்னர், இறுதியில் கண்கவரும் அழகு காஞ்சிபுரம் பட்டுப்புடவையை அந்த மணமகன் தெரிந்தெடுத்தான். தான் தெரிந்துகொண்ட அந்த அழகுப் புடவையை கட்டிக் கொண்டு, தன் மணவாட்டி திருமண நாளன்று மௌனமாய் வருவதைக் கண்டு அந்த மணமகன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை!

ஆனால், அவன் தெரிந்து கொண்ட விலையேறப்பெற்ற அந்த பட்டுச் சேலை மூலமாக தனது சடுதியான மரணத்தை விலைகொடுத்து வாங்குகின்றோம் என்பதை, சரியாக 30 நாளுக்குப் பின்னர்தான் அந்த மணவாளனால் கண்டு கொள்ள முடிந்தது, அந்த அழகுப்புடவையை உடுத்திக் கொண்டு, தன் இளம் மனைவி தனது மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்திருக்க, அவன் வாகனத்தை விரைவாக ரஸ்தாவில் ஓட்டிச் சென்றான். அந்தோ, எதிர்பாராதவிதமாக அந்தப் புடவையின் தொங்கல் அந்த இரண்டு சக்கர வாகனத்துக்குள் நன்கு மாட்டி, இருவரும் ரஸ்தாவில் தூக்கி எறியப்பட்டனர். புது மணமகன் பலத்த காயமுற்று பரிதாபகரமாக மரணமடைந்தான்!

சகோதரா, மரணம், தான் விரும்பி அணிந்த புடவையின் ரூபமாக மாத்திரமல்ல, வேறு பல்லாயிரம் ரூபமாகவும் சடுதியாக வரக்கூடியது! எனவே ஜாக்கிரதையாயிருந்து தேவனிடத்தில் மனந்திரும்பு! இதுவே அனுக்கிரக காலம், இன்றே இரட்சண்ய நாள்.

"அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காக கண்ணீர் விட்டழுது, உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாய் இருக்கிறது" என இயேசு வருந்தி அழைக்கிறார்! (லூக்கா.19:41,42).

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.